IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

SC.No.15 /2024

dated : 17.07.2025

P.W.1

Name சரஸ்வதி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

அந்த வயலில் நாங்கள் 12 ஆண்டுகளாக பாடுபட்டு வருகிறோம். அந்த நிலத்தின் உரிமையாளர் முதலியார் ஆவார் பெயர் எனக்கு தெரியாது. என் மகன் இறந்து கிடந்ததை காலை 7 மணிக்கு பார்த்தேன். காலை 9 மணிக்கு காவல் நிலையத்தில் பெட்டிசன் கொடுத்தோம். போலீசார் சுமார் 1/2 மணி நேரத்தில் வயலுக்கு வந்துவிட்டார்கள். என் மகன் விழுந்து கிடந்த இடத்தில் நெல் பயிர் களைந்து கிடந்தது துண்டு கிடந்தது. என் மகன் காலை 5 1/2 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டார். ஒரு மூடை உரைத்தை எடுத்துக் கொண்டு சென்றார். நாங்கள் விவசாயம் செய்து வந்த இடம் ஒரு ஏக்கர் ஆகும். என் மகன் இறந்த காலம் பனிக்காலம் என்றால் சரிதான். நெல்லுக்கு உரம்போட எடுத்துச் சென்றார். பனிக்காலத்தில் உரம் வெயில் வந்த பின்னர்தான் உரம் போட முடியும் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரித்தார்கள். அப்போது அப்போது போலீசாரிடம் எந்த கடையில் உரம் வாங்கினோம் என்று கூறவில்லை. காலை 11மணிக்கு என் மகன் சடலத்தை

மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். போலீசாருடன் வந்து மருத்துவமனையில் இருந்துதான் வந்து எடுத்துச் சென்றார்கள். நானும், எதிரிகளும் வெவ்வேறு சமுதாயத்தினர் என்றால் சரிதான். நான் கூறும் முதலியார் நிலத்தை ஒரு காலத்திலும் நானோ என் கணவரோ விவசாயம் செய்து அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் மகனும், கணவரும் காட்டுப்பன்றிகளை பிடிப்பதற்காக அந்த இடத்தின் உரிமையாளார்களுக்கு தெரியாமலேயே திருட்டு தனமாக மின் வேளி அமைத்து காட்டு மிருகங்களை வேட்டையாடி வருவதை வழக்கமாக கொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் விவசாயி என்ற முறையில் எங்கள் செயலை பலமுறை கண்டித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு திருட்டுத்தனமாக மின்வேளி அமைத்து அதில் மின் விபத்து ஏற்பட்டு இறந்துபோனார் என்றும் எதிரிகள் எங்களை கண்டித்த விரோதத்தால் அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பொய்ப்புகாரின் அடிப்படையில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் இறந்ததற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.17 17:35:45 +0530